# ஜூன் மாத ராசி பலன்

ஜோதிடர் மோகனபிரியா

Join us on our
WhatsApp/Youtube/Insta/X/Fb



## மிதுனம்

மிதுன ராசியினருக்கு ஜூன் மாத தொடக்கத்திலேயே ராசிநாதன் புதன் ராசிக்கு பனிரெண்டில் மறைந்து தனது நண்பரான சுக்கிரனின் வீட்டில் மற்றொரு நண்பரான சூரியனோடு சேர்ந்து மற்றும் குருவின் சேர்க்கையால் சுபத்துவமாகி இருப்பது மிகவும் அற்புதமான ஒரு அமைப்பாகும். பனிரெண்டாம் இடத்தில் மாதத்தின் முதல் பாதி அதிக சுபகிரகங்களோடு ராசி அதிபதி புதன் அமர்வதால் நிறைய பலவிதமான தொழில் பற்றிய சிந்தனைகள் மற்றும் ஏற்கனவே இருக்கும் தொழிலை விரிவுபடுத்தும் சிந்தனைகள் கோடிஸ்வரனாகும் கனவு என அனைத்தும் வந்து போகும்.



Join us on our
WhatsApp/Youtube/Insta/X/Fb

# மிதுனம் - ஜூன் மாத ராசி பலன் தொடர்கிறது...

முயற்சி ஸ்தானாதிபதி சூரியன் பனிரெண்டில் மறைந்து இருப்பதால் மாதத்தின் இரண்டாம் பாதியில் அதாவது சூரியன், சுக்கிரன், புதன் மூவரும் மிதுனத்தில் சஞ்சாரிக்கும் போது அதற்கான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வங்கியில் கடன் எதிர்பார்த்தவர்களுக்கு சுப கடன்கள், வாகன கடன்கள், கல்வி கடன்கள் கிடைக்கும். வெளிநாட்டில் நிரந்தர குடியுரிமை எதிர்பார்த்தவர்களுக்கு நிரந்தர குடியுரிமை கிடைக்கும் நேரம்.

விரய ஸ்தானம் அதிக வலு பெறுவதால் சுப செலவுகள் நிறைய இருக்கும் ஆனால் செலவுக்கு ஏற்ற வரவும் உண்டு. கையில் பணம் சேமிப்பாக தேங்கி நிற்காது. பாக்கியஸ்தானத்தில் சனி ஆட்சி பெறுவது தந்தை வழியில் சில செலவுகளை கொடுத்து பொருளாதாரத்தில் உயர்வை கொடுக்கும்.

# மிதுனம் - ஜூன் மாத ராசி பலன் தொடர்கிறது...

Join us on our
**WhatsApp/Youtube/Insta/X/Fb**

ஏழாம் அதிபதி பனிரெண்டில் மறைவதாலும் பதினோராம் இடத்தில் சனி செவ்வாய் தொடர்பு கொள்வதாலும் காதல் கைகூடுவதில் சிக்கல் வரலாம் பொறுமை காப்பது நன்று. திருமணத்திற்கு வரன் தேடுபவர்களுக்கு உங்கள் சுய ஜாதக தசா புத்தி நன்றாக இருக்கும் பட்சத்தில் மாதத்தின் பிற்பகுதியில் மேற்கொள்ளலாம்.

மூத்த சகோதர சகோதரிகளோடு விட்டு கொடுத்து செல்வது நல்லது. வயதானவர்களுக்கு கேது சுகஸ்தானத்தில் இருப்பதால் சிறு சிறு அஜீரண கோளாறுகள் வந்து நீங்கும். குரு பார்வை இருப்பதால் பெரிய உபத்திரவம் இருக்காது என்று நம்பலாம். இல்லத்தரசிகள் குடும்பத்திற்கு தேவையான ஏ சி, பிரிட்ஜ், வாஷிங் மெஷின் போன்ற சாதனங்களை புதுப்பித்து கொள்வீர்கள்.

# மிதுனம் - ஜூன் மாத ராசி பலன் தொடர்கிறது...

Join us on our
**WhatsApp/Youtube/Insta/X/Fb**

**மொத்தத்தில் மிதுன ராசியினருக்கு புதிய தொழில் முதலீடுகளை தவிர்த்து, வீண் விரயங்களை சுப விரயங்களாக மாற்றி கொள்வது நல்லது.**

**அதிர்ஷ்ட நாட்கள்: 1,2,4,8,9,10,11,13,14,23,29,30**

